# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108502

1. District : Coimbatore PS: V&AC Year: 2021 FIR No.: 9/2021/AC/CB Date: 04.03.2021
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: the PC Act 1988 as Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: amended by the Prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.03.2021 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 13.00hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.03.2021 Time : 08.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 04.03.2021 Time : 08.00hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer typed in Tamil
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 6 Km North West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Pannimadai VAO Office, Coimbatore North Taluk, Coimbatore
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Karthick (b) Father's/ Husband's Name : Shanmugasundaram
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 31/2021 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Travel Agency (g) Address : Door No. 4/122, Ramanathapuram, No. 22, Nanjundapuram, Chinnathadagam, Coimbatore.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Sivakumar, Village Administrative Officer, Pannimadai Village Coimbatore North Taluk, Coimbatore
2) Tr. Palanisamy, Assistant.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. K... 04/03/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04.03.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. SASILEKHA
Rank: நிலை Inspector No/ எண் ...
VSAC, Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

04.03.2021-ம் தேதி வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது S.கார்த்திக், வயது-31, த/பெ.சண்முகசுந்தரம், கதவு எண்.4/122, ராமநாதபுரம், நம்பர்.22 நஞ்சுண்டாபுரம், சின்னதடாகம், கோயம்புத்தூர் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரிடம் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, பன்னிமடை கிராம நிர்வாக அலுவலர் சிவகுமார் மற்றும் அவரது உதவியாளர் பழனிச்சாமி ஆகியோர் புகார்தாரரிடம் தனது அம்மா உஷாதேவி பெயரில் பட்டா மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் ரூ.7000/- கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 04.03.2021-ம் தேதி காலை 08.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 9/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர் S.கார்த்திக், வயது-31, த/பெ.சண்முகசுந்தரம், கதவு எண்.4/122 ராமநாதபுரம், நம்பர் 22. நஞ்சுண்டாபுரம், சின்னதடாகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் கோயம்புத்தூர் மாவட்டம், சின்னதடாகம், நம்பர்.22 நஞ்சுண்டாபுரம், கதவு எண்.4/122 ராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் BE (Computer Science) படித்துள்ளேன். நான் வீட்டிலேயே கார்த்திக் டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ் என்ற பெயரில் வாடகைக்கு கார்களை அனுப்பி வருகிறேன். மேலும் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் ஏஜெண்டாக இருக்கிறேன். தாளியூரைச் சேர்ந்த முத்துசாமிகவுண்டர் மகன் நல்லமுத்து மற்றும் சுப்பிரமணியம்பாளையத்தைச் சேர்ந்த ஜம்புகேஸ்வரன் மனைவி சம்பூர்ணம்

ஆகியோரிடமிருந்து பன்னிமடை கிராமம், ஸ்ரீசூர்யா கார்டன்ஸில் சைட் எண்.11 புல எண்.394/2-ல் 6.74 செண்ட் இடத்தை எனது அம்மா உஷாதேவி பெயரில் வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவண எண்.2357/2007 நாள் 12.04.2007-ல் கிரையம் பெற்றோம். மேற்படி இடத்திற்கு பட்டா பெயர் மாறுதல் செய்ய வேண்டி இருந்ததால் எனது அப்பா 02.03.2021-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு துடியலூரில் உள்ள கூட்டுறவு சேவா ஸ்தாபனத்தில் உள்ள இ-சேவை மையத்தில் பட்டா பெயர் மாறுதல் செய்ய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார். அதற்கு ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அப்போது இ-சேவை மையத்தில் இருந்த நபர் நீங்கள் உடனே பன்னிமடை விஏஓ அவர்களை பாருங்கள் என்று சொல்லியுள்ளார். அதன்பின்னர் எனது அப்பா சுமார் 11.30 மணிக்கு பன்னிமடை விஏஓ அவர்களை பார்க்க சென்ற போது விஏஓ அலுவலகத்தில் இல்லை. விஏஓ அலுவலகத்தில் இருந்த உதவியாளர் பழனிச்சாமி என்பவர் விஏஓ எலெக்சன் மீட்டிங் சென்றுள்ளதாகவும், இன்றைக்கு வர மாட்டார் நாளைக்கு மதியம் 12 மணிக்கு மேல் வருவார் என்று தெரிவித்துள்ளார். அப்போது அவர் எனது அப்பாவிடம் ஆவணங்களை கேட்டு வாங்கி பார்த்துவிட்டு கம்ப்யூட்டர் வில்லங்க சான்று வேண்டாமென்றும், ரிஜிஸ்டர் ஆபீசிற்கு சென்று வில்லங்க சான்று வாங்கி கொண்டு வர சொல்லியுள்ளார். அதன்படி நேற்று 03.03.2021-ம் தேதி வில்லங்க சான்றுடன் நானும், அப்பாவும் மதியம் சுமார் 12 மணிக்கு பன்னிமடையில் உள்ள விஏஓ அலுவலகத்திற்கு போனோம். அப்போது விஏஓ அவர்களை பார்ப்பதற்காக 5, 6 பேர்கள் இருந்ததால் வெளியே காத்திருந்தோம். மதியம் சுமார் 1 மணியளவில் விஏஓ அந்த நபர்களை அனுப்பி விட்டு எங்களை அலுவலகத்திற்குள் அழைத்தார். அப்போது நான் எனது அம்மா உஷாதேவி பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்காக ஆன்லைனில் விண்ணப்பம் செய்த ஒப்புகை சீட்டை காண்பித்த போது அவர் என்னிடம் இடத்திற்கான ஆவணங்களை வாங்கி சரிபார்த்து விட்டு அசல் ஆவணங்களை என்னிடம் கொடுத்துவிட்டு என்னுடைய செல்போன் எண்ணை வாங்கினார். அப்போது அவர் என்னிடம் பணம் செலவாகும் என்றும் பண விபரத்தை எனக்கு உதவியாக இருக்கும் உதவியாளர் பழனிசாமி சொல்வார் என்று கூறி வெளியில் இருந்த உதவியாளர் பழனிச்சாமி என்பவரை அழைத்து எங்களுடைய ஆவணங்களை பழனிச்சாமியிடம் கொடுத்து அவரிடம் விபரத்தை கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன்பின்னர் எங்களை பழனிச்சாமி அலுவலகத்திற்கு வெளியே அழைத்து வந்து பட்டா பெயர் மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய விஏஓக்கு ரூ.7000/- ஆகும். நீங்கள் பணம் கொடுத்திங்கன்னா 3 நாட்களில் வேலை முடித்துவிடும் இல்லாட்டி எலெக்சன் முடிந்த பின்னர் தான் உங்களுக்கு பட்டா பெயர் மாறுதல் ஆகும் என்று சொன்னார். அப்போது நான் எனது அண்ணனிடம் கேட்டுவிட்டு வருவதாக சொன்னேன். அதற்கு அவர் சரி

கேட்டுவிட்டு பேசுங்க என்று சொன்னார். அப்போது விஏஓ பெயர் சிவகுமார் என்று தெரிந்து கொண்டோம். அதன்பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்பு உதவியாளர் பழனிசாமி பேச சொன்னதன் பேரில் நான் எனது நண்பரிடமிருந்து பழனிசாமியின் செல்போன் எண்ணை வாங்கி விட்டு மாலை சுமார் 6 மணிக்கு நான் எனது செல்போன் எண்.9003850952 -லிருந்து பழனிசாமி செல்போன் எண். 7339603471-க்கு என் பெயர் விபரத்தை சொல்லி பேசிய போது அவர் இன்னைக்கே பணம் கொடுத்திருந்தால் வேலை முடிந்திருக்கும். சரி நாளை மதியம் 12 மணிக்கு பணத்துடன் வந்து விஏஓவை பாருங்க என்று சொன்னார். நான் யோசித்து பார்த்ததில் எனது அம்மா உஷாதேவி பெயரில் பட்டா பெயர் மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய விஏஓ சிவகுமார் அவர்களுக்காக அவரது உதவியாளர் பழனிச்சாமி மூலம் பணம் ரூ.7000/- கேட்கிறார். எனக்கு பணம் கொடுத்து பட்டா பெயர் மாறுதல் செய்ய விருப்பமில்லை. எனவே விஏஓ சிவக்குமார் மற்றும் அவருக்காக லஞ்சமாக பணம் கேட்கும் உதவியாளர் பழனிச்சாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, sd/-(xxxx) (S.Karthick) 04.03.2021. Sir, Received the complaint on 04.03.2021 at 08.00 hrs sd/-(xxxx) 04.03.2021 Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr.No.9/2021/AC/CB U/s.7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 04.03.2021 at 08.30 hrs sd/-(xxxx) (K.Sasilekha) 04.03.2021, Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

04.03.2021

(கி.சசிலேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.

அனுப்புநர்

S.கார்த்திக், வயது-31,
த/பெ.சண்முகசுந்தரம்,
கதவு எண்.4/122 ராமநாதபுரம்,
நம்பர் 22. நஞ்சுண்டாபுரம்,
சின்னதடாகம்,
கோயம்புத்தூர்.

பெறுநர்

காவல் ஆய்வாளர் அவர்கள்,
லஞ்ச ஒழிப்பு துறை,
கோயம்புத்தூர்.

அய்யா,

நான் கோயம்புத்தூர் மாவட்டம், சின்னதடாகம், நம்பர்.22 நஞ்சுண்டாபுரம், கதவு எண்.4/122 ராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் BE (Computer Science) படித்துள்ளேன். நான் வீட்டிலேயே கார்த்திக் டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ் என்ற பெயரில் வாடகைக்கு கார்களை அனுப்பி வருகிறேன். மேலும் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் ஏஜெண்டாக இருக்கிறேன். தாளியூரைச் சேர்ந்த முத்துசாமிகவுண்டர் மகன் நல்லமுத்து மற்றும் சுப்பிரமணியம்பாளையத்தைச் சேர்ந்த ஜம்புகேஸ்வரன் மனைவி சம்பூர்ணம் ஆகியோரிடமிருந்து பன்னிமடை கிராமம், ஸ்ரீசூர்யா கார்டன்ஸில் சைட் எண்.11 புல எண்.394/2-ல் 6.74 செண்ட் இடத்தை எனது அம்மா உஷாதேவி பெயரில் வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவண எண்.2357/2007 நாள் 12.04.2007-ல் கிரயம் பெற்றோம். மேற்படி இடத்திற்கு பட்டா பெயர் மாறுதல் செய்ய வேண்டி இருந்ததால் எனது அப்பா 02.03.2021-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு துடியலூரில் உள்ள கூட்டுறவு சேவா ஸ்தாபனத்தில் உள்ள இ-சேவை மையத்தில் பட்டா பெயர் மாறுதல் செய்ய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார். அதற்கு ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அப்போது இ-சேவை மையத்தில் இருந்த நபர் நீங்கள் உடனே பன்னிமடை விஏஓ அவர்களை பாருங்கள் என்று சொல்லியுள்ளார். அதன்பின்னர் எனது அப்பா சுமார் 11.30 மணிக்கு பன்னிமடை விஏஓ அவர்களை பார்க்க சென்ற போது விஏஓ அலுவலகத்தில் இல்லை. விஏஓ அலுவலகத்தில் இருந்த உதவியாளர் பழனிச்சாமி என்பவர் விஏஓ எலெக்சன் மீட்டிங் சென்றுள்ளதாகவும், இன்றைக்கு வர மாட்டார் நாளைக்கு மதியம் 12 மணிக்கு மேல் வருவார் என்று தெரிவித்துள்ளார். அப்போது அவர் எனது அப்பாவிடம் ஆவணங்களை கேட்டு வாங்கி பார்த்துவிட்டு கம்ப்யூட்டர் வில்லங்க சான்று வேண்டாமென்றும், ரிஜிஸ்டர் ஆபீசிற்கு சென்று வில்லங்க சான்று வாங்கி கொண்டு வர சொல்லியுள்ளார். அதன்படி நேற்று 03.03.2021-ம் தேதி வில்லங்க சான்றுடன் நானும், அப்பாவும் மதியம் சுமார் 12 மணிக்கு பன்னிமடையில் உள்ள விஏஓ அலுவலகத்திற்கு போனோம். அப்போது விஏஓ

அவர்களை பார்ப்பதற்காக 5, 6 பேர்கள் இருந்ததால் வெளியே காத்திருந்தோம். மதியம் சுமார் 1 மணியளவில் விஏஓ அந்த நபர்களை அனுப்பி விட்டு எங்களை அலுவலகத்திற்குள் அழைத்தார். அப்போது நான் எனது அம்மா உஷாதேவி பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்காக ஆன்லைனில் விண்ணப்பம் செய்த ஒப்புகை சீட்டை காண்பித்த போது அவர் என்னிடம் இடத்திற்கான ஆவணங்களை வாங்கி சரிபார்த்து விட்டு அசல் ஆவணங்களை என்னிடம் கொடுத்துவிட்டு என்னுடைய செல்போன் எண்ணை வாங்கினார். அப்போது அவர் என்னிடம் பணம் செலவாகும் என்றும் பண விபரத்தை எனக்கு உதவியாக இருக்கும் உதவியாளர் பழனிசாமி சொல்வார் என்று கூறி வெளியில் இருந்த உதவியாளர் பழனிச்சாமி என்பவரை அழைத்து எங்களுடைய ஆவணங்களை பழனிச்சாமியிடம் கொடுத்து அவரிடம் விபரத்தை கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன்பின்னர் எங்களை பழனிச்சாமி அலுவலகத்திற்கு வெளியே அழைத்து வந்து பட்டா பெயர் மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய விஏஓக்கு ரூ.7000/- ஆகும். நீங்கள் பணம் கொடுத்திங்கன்னா 3 நாட்களில் வேலை முடித்துவிடும் இல்லாட்டி எலெக்சன் முடிந்த பின்னர் தான் உங்களுக்கு பட்டா பெயர் மாறுதல் ஆகும் என்று சொன்னார். அப்போது நான் எனது அண்ணனிடம் கேட்டுவிட்டு வருவதாக சொன்னேன். அதற்கு அவர் சரி கேட்டுவிட்டு பேசுங்க என்று சொன்னார். அப்போது விஏஓ பெயர் சிவகுமார் என்று தெரிந்து கொண்டோம். அதன்பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்பு உதவியாளர் பழனிசாமி பேச சொன்னதன் பேரில் நான் எனது நண்பரிடமிருந்து பழனிசாமியின் செல்போன் எண்ணை வாங்கி விட்டு மாலை சுமார் 6 மணிக்கு நான் எனது செல்போன் எண்.9003850952 -லிருந்து பழனிசாமி செல்போன் எண். 7339603471-க்கு என் பெயர் விபரத்தை சொல்லி பேசிய போது அவர் இன்னைக்கே பணம் கொடுத்திருந்தால் வேலை முடிந்திருக்கும். சரி நாளை மதியம் 12 மணிக்கு பணத்துடன் வந்து விஏஓவை பாருங்க என்று சொன்னார். நான் யோசித்து பார்த்ததில் எனது அம்மா உஷாதேவி பெயரில் பட்டா பெயர் மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய விஏஓ சிவகுமார் அவர்களுக்காக அவரது உதவியாளர் பழனிச்சாமி மூலம் பணம் ரூ.7000/- கேட்கிறார். எனக்கு பணம் கொடுத்து பட்டா பெயர் மாறுதல் செய்ய விருப்பமில்லை. எனவே விஏஓ சிவக்குமார் மற்றும் அவருக்காக லஞ்சமாக பணம் கேட்கும் உதவியாளர் பழனிச்சாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

S.J. [signature] 04/03/2021

Sir, Received the complaint on 04.3.2021 at 08:00 hrs. [signature] Inspector of Police, Coimbatore.

Sir, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr.No. 9/2021/AC/CB U/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 is registered by me on 04.03.2021 at 08:30 hrs. [signature] Inspector of Police, V&AC, Coimbatore.